# உலகளாய கல்வி முறைகளில் தாய்மொழிக் கல்வியின் சிறப்பு

*முனைவர் ப. புஷ்பலதா*
தமிழ்ப் பேராசிரியை
அப்பல்லோ கல்வியியல் கல்லூரி
சென்னை, தமிழ்நாடு

மலர்: 10
சிறப்பிதழ்: 1
மாதம்: செப்டம்பர்
வருடம்: 2022
P-ISSN: 2321-788X
E-ISSN: 2582-0397
DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-5320

## முன்னுரை

தமிழ்மொழி அது நம் தாய்மொழி தமிழர்கள் அனைவரும் உயிரினும் மேலானதாகப் போற்றிப் பாதுகாக்கும் மொழி. மனிதர் தம் வாழ்வில் கேட்டும் பேசியும் வரும்மொழியே தாய்மொழியாகும். ஒரு தாய் தன் பிள்ளைக்குப் பாலூட்டும் பொழுதும் சீராட்டிப் பாராட்டும் பொழுதும் பேசும் மொழியையே தாய்மொழி என்கிறோம். "இந்தச் சிறப்பினை எண்ணியே நம் தாய்மொழியாகிய தமிழ்மொழியை ஆன்றோர் "பால்வாய்ப் பசுத்தமிழ்" என்று சிறப்பித் திருக்கின்றனர்."[1]

நம் தாய்மொழி "கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்தப் பிறந்தமொழி". பழமையும் பெருமையும் நிறைந்தது இது. புதுமையும் பொருந்தி இன்றும் வழக்கழியாது என்றும் நின்று நிலவுகிறது. இது உயர் தனிச்செம்மொழியாகும். "தமிழ்த் தெய்வ வணக்கம் கூற வந்த பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் தமிழ்மொழிக்குப் "பரம்பொருளை" உவமை கூறினார். ?[2] மொழி சமூகத்தில் தான் வளர்ச்சிப்பெறும். மோழியின்றேல் மக்கள் சமூகமாகத் திகழ் முடியாது. பொது வாழ்க்கைக்கு மொழி இன்றியமையாதது. அன்றாட வாழ்வில் ஒருவரோடொருவர் உறவாடுவதற்கு மொழியே ஒரு சிறந்த கருவி. சாதாரணமாக மக்கள் முதலில் பேசத் தொடங்கிய தாய்மொழியையே ஒரு சிறந்த கருவியாகக் கொண்டிருந்தார்கள்.

நமது எண்ணங்களைப் பேச்சு மூலமாகவும், எழுத்து வடிவில் வெளியிடுவதற்கும் தாய்மொழியாகிய தமிழையே மூலமாகக் கையாள்கிறோம். மாறுப்ட்ட கொள்கைகள், சமயங்கள், குலங்கள் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், தொழில்கள் ஆகியவை உடையவர்களும் பேசும் தாய்மொழியால் ஒன்றுபடுவதால் தாய்மொழியின் பேராற்றலை நினைத்து வியக்கின்றோம். தாய்மொழியை நன்கு கற்றவர்கள் பிறந்த மொழியையும் எளிதில் கற்றுக் கொள்வர்.

தாய்ப்பால் குடித்து வளர்ந்த பிள்ளை அறிவும், ஆற்றலும், ஆரோக்கியமும் நிறைந்து நீண்ட நாள் வாழ்தல் போல தாய்மொழியில் கல்வி கற்றவரும் விளங்குவர். எனவே, இத்தகைய உயர் தன்மைகளையுடைய தாய்மொழியாம் தமிழ்மொழி கலைத் திட்டத்தில் ஒரு சிறந்த இடத்தை வகிக்கிறது.

தமிழ்மொழியாசிரியர்கள் மொழியைக் கற்பிக்கும் முன்னர்க் கற்பிக்க வேண்டிய நோக்கங்களை அறிந்து கற்பித்தல் மிகவும் இன்றியமையாதது. கற்போனுக்கு அடிப்படையாய் இருக்க வேண்டிய "மொழிசார் திறன்கள் நான்கு அவை கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல், இவற்றில் கேட்டல்திறன், பேசுந்திறனுக்கும், படித்தல்திறன், படைத்தல் திறனுக்கும் அடிப்படையாகின்றன."[3] யாரொருவன் நன்கு கேட்கவில்லையோ அவன், நன்கு பேச இயலாதவனாகிறான். இந்த அடிப்படைத்திறன்களை வளர்க்க உதவும் பயிற்சிகளையே திறன்களைக் கற்பித்தல் இன்றியமையாமையாகிறது.

**சிந்தனை**

ஆசிரியர் உணவுகளை ஊன்றிக் கவனிப்பதால் சொல்களின் அழுத்தந்திருத்தமான உச்சரிப்பால் பல புதிய நினைவுகளும் சிந்தனைகளும் தோன்றக் கூடும். "அறிவு எம்மொழி வாயிலாகவும் பெறப்படலாம். ஆனால் சிந்தனையை முழுமையாக வளர்க்கும் திறன் தாய்மொழிக்கே உண்டு. தாய்மொழியே வாழ்வோடு வாழ்வாகக் கலந்து நிற்பதாகும். அறிவியலறிஞர்கள் பலரும் தத்தம் கண்டுபிடிப்புகளைத் தாய்மொழி வழியே வெளியிட்டுள்ளமையும் படைப்பாளர்கள் தத்தம் புகழ்மிக்க படைப்புகளைத் தாய்மொழியிலே படைத்துள்ளமையும், தாய்மொழியே சிந்தனை வளர்ச்சிக்கு துணையாகும் சிறப்பை எடுத்துக்காட்டுவனவாகும்."[4]

படிக்கும் பகுதிகளிலுள்ள கருத்துகளை அறிந்து, தான் முன்பறிந்த கருத்துகளோடு தொடர்புப்படுத்திப் புதிய கருத்துகளை உருவாக்கிக் கொள்ள உதவும். வாய்க்குள் படித்தலின் மூலம் மாணவரது சிந்தனைத் திறனை வளர்த்தல் ஆசிரியர் பயிற்சி செய்யலாம். மேலும் விரிபாகப் படிப்பதால் புதுப்புது நூல்களைப் படிக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. அந்நூல்களிலிருந்து புதுப்புதுக் கருத்துகளைப் பெறுகின்றனர். இவ்வாறு புதுக்கருத்துகள் பெறவும், சிந்தனை வளர்க்கவும் வாய்க்குப் படித்தல் இடமளிக்கும் வாய்ப்பாகும்.

**எண்ணம்**

எண்ணத்தை வெளியிடுவதற்கு மொழி உதவுகின்றது. எண்ணத்தை வெளியிடும்பொழுது தெளிவாகக் கூறுவதற்குத் தாய்மொழியில் திறமை பெற்றிருத்தல் வேண்டும். எத்துணை தாம் பிற மொழியில் வல்லமை பெற்றிருப்பினும் தாய்மொழிச் சொற்களுக்குத் தனிவேகமும் சிறப்பும் உண்டு. ஏனெனில் பிறமொழியை விடத் தாய்மொழியில் சொற்களின் தொகுதி மிகுதியாக இருக்கும். அச்சொற்களும் அனுபவத்தோடு இணைந்தவையாக இருக்கலாம். எனவே, எண்ணத்தை தெளிவாகவும், முறையாகவும் வெளியிடத் தாய்மொழித் திறமை ஒருவருக்கு நன்கு உதவுவதாகும். தகுந்த சொற்களை ஏற்ற இடங்களில் பயன்படுத்த முடியும். எண்ணங்களை, நாம் எண்ணுகிற வகையிலேயே கூறி செயலில் வெற்றி பெறலாம்.

தாய்மொழியின் மூலமாகத் தான் எண்ணங்களை, கருத்துகளை உணர்ச்சிகளை சிறந்த முறையிலும் வெளியிட முடியும். மொழியில் தேர்ச்சி இல்லாவிடில், எண்ணுவது ஒன்றாகவும், அதனைச் சொல்வது வேறொன்றாகவும் அமைந்துவிடுதல் கூடும். ஒருவர் ஏதோ ஒன்றைக் கூற பிறர் தவறு எனச் சுட்டிக்காட்டிய உடனே, "ஐயா, நான் அந்தப் பொருளில் கூறவில்லை! நான் நினைத்தது வேறு. அதனைச் சரியாகச்

சொல்ல முடியவில்லை” என்று அவர் வருத்தமுடன் கூறுவதைச் சிலவேளைகளில் நாம் கேட்டிருக்கலாம். நம் உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களை வெளியிட மொழியில் தேர்ச்சி தேவை என்பதை இந்நிகழ்ச்சி உணர்த்துகின்றதன்றோ?”5

எண்ணங்களை வெளியிடுவதில் தான் எத்தனை வகை? கடந்த காலத்தில் நிகழ்ந்தவற்றை நினைவுக்குக் கொண்டு வந்து வருணிக்கிறோம். மனப்பான்மையைக் கூறுகின்றோம். ஊணர்ச்சிகளை வெளியிடுகின்றோம். திறனாய்வு செய்து மதிப்பிடுகின்றோம். அப்போது ஒப்பிடுகின்றோம். குறை கூறுகின்றோம். பாராட்டுகின்றோம். சிலவேளைகளில் செய்திகளை உவமைக்கூறி விளக்குகின்றோம். இவ்வாறு செயல்படுவதற்கெல்லாம் அடிப்படைத் தேவை மொழித் திறனன்றோ? தம்முடைய கருத்துகளை நிரல்பட அமைத்துச் சுவையாகச் சொல்ல வல்லவர். இருப்பின் உலக மக்கள் அவர் சொற்கேட்டு விரைந்து செயற்படுவர் என்னும் கருத்தினை வான்புகழ் கொண்ட வள்ளுவர்.

**“விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது**
**சொல்லுதல் வல்லார்ப் பெறின்.”[6]**
**“எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்**
**நுண்பொருள் காண்ப தறிவு”[7]**

**படைப்பாற்றல்**

பிறர் பேசுவதைக் கேட்கும், நல்ல நூல்களைப் படித்தும், நாம் கருத்துகளையும், செய்திகளையும் அறிந்து கொள்ளுகின்றோம். அவற்றைப் பற்றி நாம் எண்ணும் பொழுது புதிய கருத்துகள் தோன்றுகின்றன. அவற்றைப் பேச்சு மூலமாகவும், எழுத்து மூலமாகவும் வெளி யிடுகின்றோம். இவ்வாறு கருத்துக்களை வெளி யிடுவதோடு அமையாது சிலர் புதியன படைக்கும் ஆற்றல் உடையோராகத் திகழ்வர். படைப்பாற்றல் என்பது பிறப்பிலேயே அமைவது, இயற்கையானது, ஒருவரிடம் கற்பதால் உருவாக்கப் படுவதன்று எனக் கூறப்பட்டது. “அதனால் தான் “கவிஞன் உருவாவதில்லை, பிறக்கிறான்”, “கருவிலே திருவுடையார்” எனவும், தமிழிலும் பிற மொழிகளிலும் சொல்லி வந்துள்ளனர்.”[8]

சுவைபட வருணிக்கும் திறனுடையோர் புதிய கருத்துகளோடு கூடிய கதைகள் எழுதலாம். கற்பனை திறனும் உணர்ச்சிப்பெருக்கும் உடையவர் மரபுக் கவழதைகள் எழுதலாம். ஒழுங்குபெற எண்ணித் திட்பமாகக் கூறவிரும்புவோர் கட்டுரை வடிவில் கருத்துகளை அறிவிக்கலாம். உரையாடலில் வல்லவர் நாடகங்களை எழுதுதல் கூடும். இவற்றுள் எந்தத் துறையில் ஈடுபட்டுப் புதியன படைக்க வேண்டுமாயிலும் மொழியே கருவியாக அமைந்துள்ளமை கைவரப் பெற்றோரது படைப்புகள் தாம் நிலையாக நிற்பவை என்றும் புகழ் தருபவை. இக்கருத்தையே ஒரு புலவர் மிகச்சிறப்பாக கூறியுள்ளார்.

**“கலைமகள் வாழ்க்கை முகத்தது எனினும்**
**மலரவன் வண்டமிழோர்க்கு ஒவ்வாள் - மலரவன்செய்**
**வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு**
**மற்றிவர் செய்யும் உடம்பு”**

பிரம்மாவின் நாவிலேயே கலைமகள் இருப்பினும் பிரம்மா படைக்கின்ற இவ்வுடம்பு அழிந்துநடுகின்றது. ஆனால், கலைமகளின் அருள்பெற்ற வண்தமிழோர் படைக்கின்ற நூல்கள் என்றும் அழிவதில்லை. புகழடைந்து நிற்கின்றன என்பதே இச்செய்யுளில் வண்தமிழோர் என்னும் தொடர் வேண்டும் என்பதை வளமையான மொழியறிவு வேண்டும் உணர்த்துகின்றதன்றோ? மேற்கூறியவற்றிலிருந்து மொழித் துறையில் எந்தவிதமான படைப்புக்கும் மொழியே அடிப்படை

கருவி என்பது தெளி வாகத் தெரியவரும். படைப்பாற்றலை வளர்த்தல் மொழிப் பாடத்தின் நோக்கமாகும்.

மனித இனம் ஒன்றையறிந்து மகிழ்ச்சி கொள்ளுவதோடு நின்றுவிடுவதில்லை. தனது அறிவு நிலைக்கேற்பதானும் எதையாவது ஒன்றைப் படைக்க வேண்டும் என விழைகிறது. குழந்தை மணல் வீடு கட்டுவதும், தாள்களில் கிறுக்கி ஓவியம் வரைவதும் படைப்பாற்றலில் எழும் உணர்வுகளே ஆகும்.

“மொழியில் பல்வேறு படைய்பிலக்கிய வடிவங்கள் உள்ளன. அவை அனைத்தையும் உரைநடை, செய்யுள் என்னும் இரண்டனுள் அடக்கலாம். “உரைநடை” வடிவம் மொழியைக் கற்கும் தொடக்கக் காலத்திலேயே வெளியீட்டுத் திறன்களான “பேசுதல்”, “எழுதுதல்” ஆகியவற்றில் கையாளகப்படுகிறது, சிறுகதை, புதினம், நாடகம், கட்டுரை, கடிதம். ஆகியவை உரைநடை வடிவத்திலான படைப்பிலக்கியங்கள். செய்யுள் வடிவம் தொடக்க வகுப்புகளில் மழலையர் பாடல்களாகவும், பிறகு பாடல் வடிவில் அமையும் இலக்கியங்களாகவும்”[9] படைப்பாற்றலைத் தூண்டி மாணாக்கர்களைச் சிறந்த படைப்பாளர்களாக மாற்றலாம். இந்நோக்கங்களை நிறைவேற்ற மொழிப்பாடமே சிறந்ததாகும்.

“முன்னர் அனுபவித்த ஒரு நிகழ்ச்சியை மீண்டும் நம் மனக்கண்முன் கொணர்ந்து நிறுத்தி, அதனை உணர்தல் ஒருவகைக் கற்பனையாகும். இதனை “நினைவு” என்பர். பழைய புலன்காட்சிகள், பட்டறிவுகள் ஆவியவற்றின் சாயல்களையும் (Images) அவற்றினின்றும் பெறப்படும் எண்ணங்களையும் புதிய முறையில் அமைத்தலே கற்பனையாகும். பறவை இனங்கள் பறப்பதைக் கண்ட ஒருவன், மனிதர்களும் அவ்வாறே சிறகுகளைப் பெற்றுப் பறப்பதாக ஒரு காட்சியை உருவாக்கி மனத்துள் காணும் காட்சி கற்பனையாகும். சிறந்த கலைஞர்களும் எழுத்தாளர்களும் பல கற்பனைக் காட்சிகளைப் படைத்துத் தருகின்றனர். அவற்றைப் பின்பற்றி, நாம் அதே கற்பனைக் காட்சிகளை உணர்ந்து அனுபவிக்கின்றோம். ஒரு கதையைப் படிக்கும் பொழுது, கதை உறுப்பினர்களை, நேரில் தொடர்பு கொள்ளும் மக்களாகவே நாம் கருதுகின்றோம். அவர்கள் மீது பற்று கொள்கின்றோம். அவர்கள் வெற்றி பெற்றால் மகிழ்ச்சியும், தோல்வி அடைந்தால் வருத்தமும் அடைகின்றோம். இவ்வாறு நாம் காணும் கற்பனைக் காட்சிகள் நம் உள்ளத்திற்கு மகிழ்ச்சியைத் தருகின்றன. இவை, பரிவு உணர்ச்சி தோன்றவும் வழி வகுக்கின்றன.”[10]

**கற்பனையாற்றலை வளர்த்தல்**

மனிதன் மட்டுமே சிந்திக்கத் தெரிந்தவன். மற்ற விலங்குகள், பறவைகள், ஊர்வன, நீர்வாழ் ஜீவிகள் யாவும் சிந்தனையற்றவைகள். மனித சிந்தனையை, அறிவை, இன்பத்தை, வாழ்வை வளமூட்டி மேம்படுத்துவது கற்பனையே ஆகும். சூாரசரி மூளைத் திறனுடன் பிறந்த மனிதக் குழந்தைக்கள் கற்பனைத் திறம் உடையவர்கள், அவர்தம் கற்பனை ஆற்றலை செப்பமாக்கி நல்வழிப்படுத்துதல் கல்வியின் கடன்களின் ஒன்று.

நம் முன்னோர்களின் கற்பனைக்குச் சான்றுகளாகவே சிற்பங்களை, சின்னங்களை, ஓவியங்களை, காவியங்களை, மாடங்களை, இன்று நாம். னையாளும் பொருள்களை நம்மை நம் வரலாற்றை, ஏன் உலகத்தை காண்கிறோம்.

(எ.டு)

**“ஈசனார் கண்ணின் வெந்தான் என்னும்**
**ஈது இழுதைத் சொல் இவ்**
**வாசம் நாறு ஓதியாளைக் கண்டனன்**
**வவ்வல் ஆற்றான்**
**பேசல் ஆம் தகைமைத்து அல்லாப்**
**பெருமபிணி பிணிப்ப**

**ஆசையால் அழிந்து தேய்ந்தான்**
**அணங்கன் அவ் வுருவம் அம்மா!"**

என்று சூர்ப்பன்நகை கூறுவது கற்பனைக் குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டு.

தமிழ் ஆசிரியர்கள் மாணாக்கர் அறிவு நிலை, பட்டறிவு முதலியவற்றிற்கு ஏற்றவாறு கற்பனையும் அழகும் பொருந்திய பாடலைத் தேர்ந்தெடுத்துக் கற்பிக்க வேண்டும். அவ்வாறு கற்பிக்கும்பொழுது கற்பனையாற்றலையும், முருகுணச்சியும் எடுத்துக்காட்ட வேண்டும். கற்பனையாற்றலுக்கு அடிப்படை உள்ளத்தில் படிந்து கிடக்கும் உணர்ச்சியே. உணர்ச்சியும் கற்பனையும் ஒன்றையொன்று பின்னிப்பிணைந்து கிடக்கும் ஒன்றின் ஆற்றல் குறைந்துவிடும், சிந்தனையும் காட்சித் திறனும் கலந்து உணர்ச்சிகளை வெளி ப்படுத்தும்.

"கற்பனையாற்றல் உயர்ந்த கவிஞர்களிடம் காணப்படும் ஓர் அருள் ஆற்றல். இத்தகைய ஆற்றல்கள் பொதிந்துள்ள பாடல்களைக் கற்பிக்கும் போது மாணாக்கர்களிடம் மெய் மறந்து பாட்முக்களைத் துய்க்கும் ஆற்றலை உண்டாக்கிவிட்டால் அவர்களிடம் அது வளர்வதுடன் அவர்களாகவே பல இலக்கியங்களைப் படித்துத் துய்க்கும் திறமையையும் படைக்கும் ஆற்றலையும் பெறுவர்."[11]

படைக்கும் ஆற்றலைக் கட்டுரைகள், ஓரங்க நாடகங்கள், சிறுகதைகள், செய்யுள்கள் (புதுக்கவிதைகள்/மரபுக்கவிதைகள்) சொற் பொழிவுகள் முதலியவற்றை எழுத்துப்பேச்சு வழிகளில் தட்டி எழுப்பி வளர்வதற்கான முறையில் அவர்கள் உள்ளத்தைப் பயன்படுத்திவிடலாம். இதனால் ஆயிரத்தில் ஒரு மாணவன் இங்ஙனம் சிறந்து பிறந்ததில் கம்பனாகவோ, பாரதியாகவே விளங்கலாம்.

## முடிவுரை

மொழியானது கருத்துப் பரிமாற்றத்திற்கும், சிந்தனையை வளர்ப்பதற்கும் எண்ணத்தை வெளிப்படுத்துவதற்கும், அனுபவத்தை எடுத்து இயம்புவதற்கும், செயலாற்றலை வெளிப்படுத்தவும், அறிவுக் களஞ்சியங்களை அறிந்து கொள்வதற்கும், கற்பிப்பதற்கும் சிறந்த முறையில் பயன்படுகிறது.

மொழி, கருத்துப் பரிமாற்றத்திற்கான கருவியென்பது உண்மைதான். ஆனால், அதற்கு வேறுபல பணிகளும் உள்ளன. அவற்றுள் ஒன்று, குறிப்பிட்ட சமுதாயத்தினரின் அடையாளமாக விளங்குவது. நாடு ஊர் முதலிய அடையாளங்கள் மாறக் கூடியவை. ஆனால். "மொழி அடையாளம் ஒருவர் எங்கு சென்றாலும் தொடர்வது. யாரெல்லாம் மொழியை இழக்கிறார்களோ அவரெல்லாம் அடையாளம் இழந்தவர்களாக ஆகிவிடுவர்". அதாவது. அவர்களுடைய மொழியைப் பயன்படுத்தாமல் விட்டு விடும்போது தங்களுடன் இணைத்துக்கொள்ள மக்கள் குழுவின்றித் தனிமைப்படுத்தப்படுகிறார்கள். எனவே, தங்கள் அடையாளத்தைக் காத்துக் கொள்ள, மொழியைத் தக்கவைத்துக் கொள்ள, அது அவர்களின் அடையாளமாக இருப்பதை உணர்த்தவேண்டும்

## அடிக்குறிப்புகள்

1. தமிழ்மொழி கற்பித்தல் - முனைவர் கு. கணேசன் பக். 1
2. தமிழ்மொழி கற்பித்தல் - முனைவர் கு. கணேசன் பக். 2
3. தமிழ்மொழி கற்பித்தல் - முனைவர் கு. கணேசன் பக். 2
4. தமிழ் கற்பிக்கும் முறைகள் டாக்டர் பி. இரத்தினசபாபதி - சாந்தா பப்ளிஷர்ஸ் ப. 18.
5. தமிழ் கற்பிக்கும் முறைகள் டாக்டர் பி. இரத்தினசபாபதி - சாந்தா பப்ளிஷர்ஸ் ப. 19.
6. திருக்குறள் - 648 அதிகாரம் - 65.
7. திருக்குறள் - 424 அதிகாரம் - 43.

8. *சிறப்புத் தமிழ் கற்பித்தல் - இ.பா. வேணுகோபால், க. சாந்தகுமாரி ப. 464*
9. *தமிழ் கற்பிக்கும் முறைகள் டாக்டர் பி. இரத்தினசபாபதி - சாந்தா பப்ளிஷர்ஸ் ப. 22.*
10. *தமிழ்மொழி கற்பித்தல் - முனைவர் கு. கணேசன் பக். 7*
11. *சிறப்புத் தமிழ் கற்பித்தல் - இ.பா. வேணுகோபால், க. சாந்தகுமாரி ப. 1*